செ.வெ.எண்: 60 நாள்:23.01.2017

## பத்திரிகைச்செய்தி

குடியரசு தினமான 26.01.2017ஆம் தேதியன்று காலை 11.00 மணிக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 497 கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக்கூட்டம் நடைபெற உள்ளது. மேற்காணும் கூட்டத்தில் கிராமங்களில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் மேம்பாட்டுக்கான திட்டங்கள் மற்றும் ஊராட்சிகளில் அடிப்படை தேவைகளான சுகாதாரம், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் II, அம்மா பூங்கா மற்றும் அம்மா உடற்பயிற்சி கூடம், தாய் திட்டம் 2016-2017, ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்றுவரும் பல்வேறு திட்டப் பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவினம் குறித்து விவாதித்தல், பொது வினியோகத்திட்டம், தொழுநோய் இல்லாத கிராமமாக மாற்றுதல், தொழுநோய் ஒழிப்பு உறுதி மொழி எடுத்தல் உள்ளிட்ட பொருட்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள அரசின் திட்டங்கள் மற்றும் ஊராட்சியின் செயல்பாடுகள் பற்றிய விபரங்களை தெரிந்து கொண்டு பயன்பெறும் வகையில் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பொதுமக்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சார்ந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் என அனைவரும் அதிக அளவில் கலந்து கொண்டு கிராம சபைக் கூட்டத்தைச் சிறப்பிக்கவுள்ளனர்.

கிராம சபைக் கூட்டம் நடத்துவது பற்றிய செய்தியினை பொதுமக்கள் அறியும் வண்ணம் துண்டு பிரசுரங்கள் விநியோகித்தல், ஒலிப்பெருக்கி மற்றும் டாம்டாம் மூலம் அறிவிப்பு செய்தும் கிராம சபா கூட்டத்தினை சிறப்பாக நடத்திட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள தனி அலுவலர்கள் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ..ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**